**முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்**

**O.S.No.295/2022**

| | |
|---|---|
| வாதி தரப்பு சாட்சி | .. 1 |
| பெயர் | .. சங்கர் |
| தகப்பனார் / கணவர் | .. பாபு |
| வயது | .. 47 |
| தொழில் | .. |
| கிராமம் | .. எறையூர் |
| தாலுக்கா | .. செய்யாறு |

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17 ஆம் நாள் செவ்வாய்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை:**

வழக்கு சொத்து யாருக்கு சொந்தமான சொத்து என்றால் என் தாத்தா எத்திராஜ் சொந்தமானது. வழக்கு சொத்து சம்பந்தமான என்னிடம் பத்திரம் எதுவும் இல்லை. வழக்கு சொத்திற்கு முறையான ஆவணம் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு வாரிசு அடிப்படையில் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 1, 3, 8, 9, 11 வாரிசுகள் என நிரூபண வாக்கு மூலத்தில் உள்ள சங்கதிகள் தவறு என்றால் சரியல்ல. 1 வது அயிட்ட சொத்து யார் பெயரில் உள்ளது என்றால் என் தாத்தா எத்திராஜ் பெயரில் உள்ளது. தாவா 1ம் அயிட்ட சொத்து 1ம் பிரதிவாதி தகப்பனார் கிருஷ்ட கவுண்டர் பெயரில் தான் உள்ளது என்றால் சரியல்ல. 1ம் அயிட்ட சொத்து காலி நிலம் தான் என்றும் வீடு கிடையாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து சம்பந்தமாக 1ம் பிரதிவாதியின் தகப்பனார் கிருஷ்ட கவுண்டர் செய்யாறு, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. மேற்படி வழக்கு அசல் வழக்கு எண்.114/2017 நிலுவையில் இருக்கும்போது, நாங்கள் அந்த இடத்திற்கு

அத்துமீறி சென்று சேதம் ஏற்படுத்தினர் என்று காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. மேற்படி வழக்கில் 1ம் பிரதிவாதியின் தகப்பனார் கிருஷ்ட கவுண்டர் ஆதரவாக தீர்ப்பாகி உள்ளது அதில் என் தந்தை மேல்முறையீடு சென்று, அதிலும் எங்களுக்கு எதிராக தீர்ப்பாகி உள்ளது என்றால் தெரியாது, அப்போது நான் சென்னையில் கூலி வேலை செய்து இருந்தேன். அதன் என் தந்தை சீராய்வு மனு சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு என் தந்தை பெயரில் இருந்தாலும் நான் தான் நடத்தி வந்தேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு சம்பந்தமாக என் தந்தைக்கு தான் முழு விவரம் தெரியும். வாதியின் தாத்தா எத்திராஜ் என்பவருக்கு இரண்டு மனைவிகள், 1ம் மனைவி அங்கம்மாள், 2ம் மனைவி என் பாட்டி பெயர் செல்லியம்மாள் ஆவர். தாத்தாவிற்கு பூர்வீகம் என்ன என்றால் எறையூர் ஆகும். நான் 6ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தாவாவின் சொத்து விவரம் ஆதியில் 1932 ஆம் ஆண்டு அங்கம்மாள் மற்றும் பலர் பெயரில் தான் கிரையம் வாங்கப்பட்டது என்றால் தெரியாது. 1932 ஆம் ஆண்டு தாவாவிற்கான கிரையம் பத்திரம் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ளனர் என்றால் தெரியாது.

Taken down before by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- N.Suresh
**Principal Subordinate Judge,**
**Cheyyar.**